பழனிஞ்சு. கிரட்ப

T.D.R.C. 2078.

R.R. 998. 2-1924

O-,82x
N24

117300

# பழமொழித்திரட்டு

998/2.24
28 MAY 1924

மானேஜர் :

லக்ஷ்மி ஆபீஸ்,

தபால் பெட்டி 99,

சென்னை.

Copy Right] 1924 [௨

# ருத்ராக்ஷம்

ஜெபத்துக்கு உபயோகிக்கத் தகுதியானதும், மாலையாகக் கோர்க்க அணிந்துகொள்ளக் கூடியதுமான சிறிய சயிஸ் ருத்ராக்ஷம் மாலை 1-க்கு 108-மணிகள் கோர்க்கப்பட்டிருக்கும். மாலை 1-க்கு விலை அணா 6, 8, 10, 12, ரூ. 1, 1-8, ரூ. 15 வரை.

கழுத்தில் மாலையாகப் போட்டுக் கொள்ளக்கூடியதும் தனி மணியாகக் கழுத்தில் அணிந்துகொள்ளக் கூடியதுமான பெரிய சயிஸ் உள்ளதும் 5 முகம் உள்ளதும் 32-மணிகள் சேர்ந்த மாலை 1-க்கு அணா 8 முதல் ரூ. 25 வரை.

ஆறுமுகமுள்ள பெரிய சயிஸ் உள்ள 32-மணிகள் கோர்த்த மாலை 1-க்கு ரூ. 1 முதல் 25 வரை.

இன்னும் எங்களிடம் அநேக விதமான ருத்ராக்ஷங்களும் கிடைக்கும்.

## காசி வயிரவர் கயிறு

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 கெ. கயிறு | 100-க்கு | ரூ. | 3 | 0 | 0 |
| 2 கெ. ,, | ,, | ,, | 2 | 8 | 0 |
| 3 கெ. ,, | ,, | ,, | 2 | 0 | 0 |

கழுத்தில் கட்டுகிற கயிறு 1-க்கு அணா 2, 4.

## கருப்புக் காயம்

கலப்பில்லாதது உயர்ந்த ரகம் தோலா 1-க்கு அணா 6.

விலாசம்:—

**எஸ். முத்தையா & கோ.,**
சில்க் ஹவுஸ்,
காசி.


117300

2078

# பழமொழித் திரட்டு.

## அ

அகதிக்கு ஆகாயம் துணை.
அகத்தில் அழகு முகத்தில் தெரியும்.
அகல இருந்தால் நிகள உறவு;
கிட்ட இருந்தால் முட்டப்பகை.
அகவிலை அறியாதவன் துக்கம் அறியான்.
அக்கரை மாட்டுக்கு இக்கரை பச்சை. 5

அச்சாணி இல்லாத தேர் முச்சாணும் ஓடாது.
அஞ்சனக்காரன் முதுகில் வஞ்சனைக்காரன் ஏறினான்.
அஞ்சிலே வளையாதது ஐம்பதிலே வளையுமா.
அஞ்சினவன் கண்ணுக்கு ஆகாயமெல்லாம் பேய்.
அஞ்சும் மூன்றும் உண்டானால் அறியாப்பெண்ணும் கறி யாக்குவாள். 10

அடங்காத மனைவியும் ஆங்காரப் புருஷனும்.
அடாது செய்பவர் படாது படுவர்.
அடி உதவுகிறதுபோல் அண்ணன் தம்பி உதவான்.
அடிக்கும் ஒருகை; அணைக்கும் ஒருகை.
அடியும் பிடியும் சரி. 15

அடி நாக்கில் நஞ்சும் நுனி நாக்கில் அமிர்தமும்.
அடிகொச்சி நுனி ஆமணக்கா?
அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும்.
அடியாத மாடு பணியாது.
அடுக்குகிற அருமை உடைக்கும் நாய்க்குத் தெரியுமா? 20

அடுப்பங் கரை கைலாசம்;
ஆம்படையானே சுவர்க்கலோகம்.
அடுப்பு எரிந்தால் பொரி பொரியும்
அதிர்ஷ்டமும் ஐசுவரியமும் ஒருவர் பங்கல்ல.
அத்தி பூத்தாற் போல.
அப்பம் என்றால் பிட்டுக்காட்ட வேண்டுமா!

அப்பா என்றால் உச்சி குளிருமா ?
அரசனில்லாப் படை வெட்டுமா ?
அரசனை நம்பிப் புருஷனைக் கைவிட்டது போல.
அரசனுக்கு ஒருசொல் ; அடிமைக்குத் தலைச்சுமை.
அரசன் அன்று கேட்பான், தெய்வம் நின்று கேட்கும். 30

அரசன் எப்படி குடிகளும் அப்படி.
அருண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய்.
அரைக்குடம் ததும்பும், நிறைகுடம் ததும்பாது.
அலை கடலுக்கு அணைபோடலாமா ?
அலை ஓய்ந்து கடலாடவா ? 35

அறையில் ஆடி அல்லவோ அம்பலத்தில் ஆடவேண்டும்.
அவனவன் செய்தவினை அவனவனுக்கு.
அவனன்றி அணுவும் அசையாது.
அழுதபிள்ளை பால் குடிக்கும்.
அழையா வீட்டுக்கு நுழையாச் சம்மந்தி. 40

அளகேசனானாலும் அளவறிந்து செலவு செய்யவேண்டும்.
அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு.
அள்ளாது குறையாது ; சொல்லாது பிறவாது.
அள்ளிக்கொடுத்தால் சும்மா; அளந்து கொடுத்தால் கடன்.
அறக் காத்தான் பெண்டிழந்தான். 45

அறச்செட்டு முழு நஷ்டம்.
அறப்படித்த பூனை காடிப் பானையில் விழும்.
அறப் பேசி உறவாடு.
அறிவேன் அறிவேன் ஆலிலை புளியிலை போலிருக்கும்.
அறுகங் கட்டையும் ஆபத்துக்கு உதவும். 50

அறுப்புக் காலத்தில் எலிக்கு ஐந்து பெண்சாதி.
அற்பனுக்குப் பவிசு வந்தால் அர்த்த ராத்திரி குடைப் பிடிப்பான்.
அன்பற்ற மாமிக்குக் கால்பட்டாலும் குற்றம் ; கைபட்டாலும் குற்றம்.



அன்பற்ற மாமிக்குக் கும்பிடுகிறதும் குற்றம் ?
அன்றைக்கு எழுதினதை அழித்தெழுதப் போகிறானா ? 55

அன்னநடை நடக்கப்போய்த் தன்னடையும் கெட்டது.
அன்னமிட்டாரைக் கன்னமிட லாமா ?

## ஆ

ஆகுங்காலம் ஆகும் ; போகும் காலம் போகும்.
ஆக்கப்பொறுத்தவன் ஆறப் பொறுக்க வேண்டும்.
ஆனானுக்கும் அடவு தப்பும். 60

ஆசை இருக்கிறது தாசில் பண்ண ; அதிர்ஷ்டம் இருக்கிறது கழுதை மேய்க்க.
ஆஸ்தி யில்லாதவன் மனிதன் அல்ல.
ஆடி ஓடி நாடியில் அடங்கிற்று.
ஆடிக் கறக்கிறமாட்டை ஆடிக்கறக்கவேண்டும் ; பாடிக் கறக்கிற மாட்டை பாடிக் கறக்க வேண்டும்.
ஆடு தழை தின்பது போல. 65

ஆடு நனைகிறதென்று கோனாய் அழுத தாம்.
ஆடு நினைத்த இடத்தில் பட்டி போடுகிறதா ?
ஆடையில்லாதவன் அரை மனிதன்
ஆடை உடையவன் சபைக் கஞ்சான்.
ஆட்டுக்கு ஒத்தது குட்டிக்கு. 70

ஆட்டைக்காட்டி வேங்கை பிடிக்கப் பார்க்கிறான்.
ஆண்டிமகன் ஆண்டியானால் நேரமறிந்து சங்கூதுவான்.
ஆண்டி எப்போ சாவான் மடம் எப்போ ஒழியும் ?
ஆதாயமில்லாமல் செட்டி ஆற்றைக்கட்டி இறைப்பானா ?
ஆதாய மில்லாத செட்டி ஆறறோடே போவானா? 75

ஆதீனக் காரனுக்குச் சாதனம் வேண்டுமா?
ஆத்தாள் அம்மணம், கும்பகோணத்தில் கோதானம்.
ஆத்திரக் காரனுக்குப் புத்தி மட்டு
ஆபத்துக்குப் பாவம் இல்லை
ஆமணக்கு விதைத்தால் ஆச்சா முளைக்குமா ? 80

ஆபத்துக்குப் பயந்து ஆற்றில் இறங்கினது போல.
ஆயிரக்கலம் நெல்லுக்கு ஒரு அந்துப்பூச்சி போதும்.
ஆயிரம் பெயரைக் கொன்றவன் அரை வயித்தியன்.
ஆயிரம் ரூபா முதலில்லாமல் பத்து ரூபா வட்டி நஷ்டம்.
ஆரும் அற்றதே தாரம்; ஊரில் ஒருவனே தோழன். 85

ஆலை இல்லா ஊரிலே இலுப்பைப்பூச் சர்க்கரை.
ஆழம் அறியாமல் காலை இடாதே.
ஆளுக்கு ஒரு குட்டிக்குட்டினால் அடியேன் தலை மொட்டை.
ஆறிலும் சாவு; நூறிலும் சாவு.
ஆறின கஞ்சி பழங்கஞ்சி. 90

ஆறின புண்ணிலும் அசடு நிற்கும்.
ஆறு கடக்கிற வரையில் அண்ணன் தம்பி, ஆறு கடந்தால் நீயார் நானார்?
ஆற்றிலே போகிற தண்ணீரை அப்பா குடி அம்மா குடி.
ஆற்றிலே போட்டாலும் அளந்து போடு.
ஆற்றுமணலிலே தினம் புரண்டாலும் ஒட்டுகிறதுதான் ஒட்டும். 95

ஆனை கட்டச் சங்கிலி தானே எடுத்துக் கொடுத்தது போல.
ஆனைகேடும் அரசுகேடும் உண்டா?
ஆனைசெத்தாலும் ஆயிரம்பொன்.
ஆனைக்கு ஒருகாலம் பூனைக்கு ஒருகாலம்.
ஆனைக்கும் அடி சறுக்கும். 100

ஆனைவரும் பின்னே; மணியோசைவரும் முன்னே.

## இ

இக்கரைமாட்டுக்கு அக்கரைபச்சை.
இடைப்புத்தி பிடரியிலே.
இட்ட உறவு எட்டு நாளைக்கு; நக்கின உறவு நாலு நாளைக்கு.
இட்டாருக்கு இட்டபலன். 105



இரக்கப் போனாலும் சிறக்கப் போ.
இரப்பவனுக்கு வெண்சோறு பஞ்சமா?
இரவல் சீலையை நம்பி இடுப்புக் கந்தையை எறிந்தாளாம்.
இருதலைக் கொள்ளி எறும்பு போல.
இருந்த கால் மூதேவி, நடந்த கால் சீதேவி. 110

இருந்தல்லவோ படிக்க வேண்டும்.
இருந்தால் நவாப் ஸாஹிப்; இல்லாவிட்டால் பக்கிரி ஸாஹிப்.
இருந்தால் பூனை, பாய்ந்தால் புலி.
இரும்பு பிடித்த கையும் சிரங்கு பிடித்த கையும் சும்மா இராது.
இல்லாத பிள்ளைக்கு இலுப்பைப்பூச் சர்க்கரை. 115

இல்லாது பிறவாது, அள்ளாது குறையாது.
இளமையிற் கல்வி எப்போதும் நிற்கும்.
இளமையில் சோம்பல் முதுமையில் வறுமை.
இறைத்த கிணறு ஊறும்; இறையாத கிணறு நாறும்.
இறையாத கிணறு பாழ்ங் கிணறு. 120

இனம் இனத்தோடே வெள்ளாடு தன்னோடே.
இன்று இலை அறுத்தவன் நாளைக் குலை அறுப்பான்.
இன்று நாளை என்பது இல்லை என்பதற்கு அடையாளம்.

## ஈ

ஈட்டி எட்டினமட்டும் குத்தும்; பணம் பாதாளமட்டும் குத்தும்.
ஈரச் சீலையைப் போர்ட்டுக் கழுத்தறுத்தான். 125

ஈர நாவிற்கு எலும்பில்லை.
ஈரைப் பேனாக்கிப் பேனைப் பெருமாள் ஆக்குகிறது.

## உ

உடல் உள்ளவரையில் உடல் கொள்ளாத கவலை.
உடல் மெச்சப் பால் குடிக்கிறாயா?
ஊர்மெச்சப் பால் குடிக்கிறாயா?
உடைந்த சங்கு ஊத்துப் பறியுமா? 130
உடையவன் பாராப் பயிர் உருப்படுமா?
உடையவன் போகா வேலை ஒருமுழம் கட்டை.
உட்கார்ந்தல்லவோ படுக்கவேண்டும்.
உண்கிற சோற்றில் நஞ்சு போடுகிறது.
உண்டது தானே ஏப்பம் வரும். 135
உண்டவீட்டுக்கு இரண்டகம் பண்ணலாமா?
உண்மை சொல்லிக் கெட்டாரும் பொய் சொல்லி வாழ்ந்தாரும் இல்லை.
உத்தியோகத்துக்குத் தக்க சுகம்.
உபசார வார்த்தை காசாகுமா?
உண்டா லொழியப் பசிதீருமா?
உப்பிட்டவரை உள்ளளவும் நினை. 140
உப்பில்லாப் பண்டம் குப்பையிலே.
உமியும் கரியும் இருக்கிறது, உடைமை செய்யப் பொன் இல்லை.
உருத்திராக்ஷப்பூனை உபதேசம் பண்ணினது போல.
உலக்கை தேய்ந்து உளிப்பிடி யாயிற்று.
உழக்கிலே கிழக்கு மேற்கா? 145
உள வில்லாமல் கள வில்லை.
உள்ளங்கை நெல்லிக்கனி போல.
உள்ளதும் கெட்டதடா நொள்ளைக் கண்ணு.
உள்ளே பகையும் உதட்டிலே உறவும்.
உறவு உறவுதான், பயிரிலே கையை வையாதே. 150
உறவுபோல இருந்து குழவிபோல கொட்டுகிறதா?
உறியிலே வெண்ணெய் இருக்க நெய்க்கு அலைவானேன்?
உற்றது சொன்னால் அற்றது பொருந்தும்.



## ஊ

ஊசல் ஆடித் தன் நிலையில் நிற்கும்.
ஊசிபோகிறது கணக்குப் பார்ப்பான்; பூசணிக்காய் போகிறது தெரியாது. 155
ஊத்தை வாயன் தேட நாற்ற வாயன் தின்ன.
ஊமைக்கு உளறு வாயன் சண்டப் பிரசண்டன்.
ஊரார் பிள்ளையை ஊட்டி வளர்த்தால் தன் பிள்ளை தானே வளரும்.
ஊரென் றிருந்தால் பறைச்சேரியு மிருக்கும்.
ஊரோடு ஒக்கஓடு; நாடோடு நடுவே ஓடு. 160
ஊர் இரண்டுபட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்டம்.
ஊர் கூடிச் செக்குத் தள்ளவா?
ஊர்க் குருவிமேல் ராம பாணம் போடுகிறதா.
ஊன்றக் கொடுத்த தடி உச்சியை உடைக்கிறது.

## எ

எங்கும் மாடமாய் இருக்கிறது, இருக்கத் தான் இடமில்லை.
எங்கே புகையுண்டோ அங்கே நெருப்பு முண்டு.
எச்சிற்கையால் காக்கை ஓட்டாதவன் பிச்சை கொடுப்பானா?
எடுப்பார் கைப் பிள்ளை.
எட்டாப் பழத்துக்குக் கொட்டாவி விடுகிறான்.
எட்டாப்பூ தேவருக்கு; எட்டும் பூ தங்களுக்கு. 170
எட்டினால் குடுமியைப்பிடி எட்டாவிட்டால் காலைப் பிடி.
எண்ணிச் செய்வது செட்டு; எண்ணாமல் செய்வது வேளாண்மை.
எத்தனை நாள் துலக்கினாலும் பித்தளை நாற்றம் போகாது.
எத்தால் வாழலாம் ஒத்தால் வாழலாம்.
எந்தப்புற்றிலே எந்தப்பாம்பு இருக்கிறதோ? 175
எந்த வாக்குப் பொய்த்தாலும் சந்தைவாக்குப் பொய்க்காது.
எய்தவன் இருக்க அம்பை நோவானேன்.

எரிகிற கொள்ளியை எறத்தள்ளினது போல.
எரிகிறதைப் பிடுங்கினால் கொதிக்கிறது அடங்கும்.
எரிகிற வீட்டில் பிடுங்கினது லாபம். 180

எருது நோய் காக்கைக்குத் தெரியுமா ?
எருமை வாங்கு முன்னே நெய்விலை கூறுகிறதா ?
எலிக்குப் பயந்து வீட்டைச் சுடலாமா ?
எலி வளையானாலும் தனிவளை வேண்டும்.
எலி விடுகட்ட பாம்பு குடிகொள்ள. 185

எலும்பு கடிக்கிற நாய்க்கு பருப்புச்சோறு ஏன் ?
எல்லாம் இருக்கிற பெட்டியிலே இலைக்கறி கடையச் சட்டியில்லை.
எல்லாரும் பல்லக்கேறினால் பல்லக்கு யார் தூக்குகிறது.
எள்ளைத் தின்றால் எள்ளளவு பசிதீரும்.
எறும்பு ஊரக் கல்லும் தேயும். 190

எறும்புக்குக் கொட்டாங்கச்சித் தண்ணீர் சமுத்திரம்.

ஏ

ஏவுகிறவனுக்கு வாய்ச்சொல்; செய்கிறவனுக்குத் தலைச்சுமை.
ஏர்பிடித்தவன் என்னசெய்வான், பானை பிடித்தவள் பாக்கியம்.
ஏழையைக்கண்டால் மோழையும் பாயும்.
ஏறச்சொன்னால் எருதுக்குக் கோபம்; இறங்கச்சொன்னால் நொண்டிக்குக் கோபம். 195
ஏற்றமுண்டானால் இறக்கமுண்டு.
ஏன் என்பாருமில்லை; எடுத்துப் பார்ப்பாருமில்லை.

ஐ

ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா ?
ஐந்தும் மூன்றும் அடுக்காயிருந்தால் அறியாப் பெண்ணும் கறி யாக்குவாள்.
ஐயர் வருகிற வரையில் அமாவாசை நிற்குமா ? 200



ஒ

ஒட்டினால் தொட்டியும் கொள்ளும்; ஒட்டாவிட்டால் கட்டியும் கொள்ளாது.
ஒய்யாரக் கொண்டையாம் தாழம் பூவாம்; உள்ளே இருக்குமாம் ஈரும் பேனும்.
ஒரு ஊருக்கு ஒரு வழியா ?
ஒருகுடம் பாலுக்கு ஒருதுளி பிரை.
ஒரு குண்டிலே கோட்டை பிடிக்கலாமா ? 205

ஒருகை முழம் போடுமா ?
ஒரு தாயற்றவனுக்கு ஊரெல்லாம் தாய்.
ஒருநாள் கூத்துக்கு மீசை சிரைக்கவா ?
ஒருபானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம்.
ஒரு பிள்ளையும் பிள்ளையா ஒரு மரமும் தோப்பா ? 210

ஒரு பொய்யை மறைக்க ஒன்பது பொய் சொல்லவேண்டும்.
ஒருவன் அறிந்தால் இரகசியம்; இருவர் அறிந்தால் அம்பலம்.
ஒன்று ஒன்றாய் நூறு. ஒருமிக்க நூறு ?

ஓ

ஓடம் விட்டு இறங்கினால் ஓடக்காரனுக்கு ஒரு சொட்டு.
ஓடி ஒருகோடி தேடுவதிலும் இருந்து ஒருகாசு தேடுவது நலம். 215

ஓட்டைச்சட்டி ஆனாலும் கொழுக்கட்டை வெந்தால் சரி.
ஓட்டை நாழிக்குப் பூண் கட்டினது போல.
ஓணான் வேலிக்கு இழுக்கிறது; தவளை தண்ணீருக்கு இழுக்கிறது.
ஓரக்கண்ணனைப் பழிக்கிறான் ஒற்றைக்கண்ணன்.

க

கங்கையிலே முழுகினாலும் காக்கை அன்ன மாகுமா ? 220

குதிரை எட்டடி பாய்ந்தால் குட்டி பதினாறடி பாயும்.
குதிரை செத்ததல்லாமல் குழிதோண்ட மூன்று பணம். 275

குதிரையில்லா ஊருக்குக் கழுதை தம்பிரான்.
குதிரையின் குணம் அறிந்தல்லோ தம்பிரான் கொம்பு கொடுக்கவில்லை.
குந்தியிருந்து தின்றால் குன்றும் கரையும்.
குப்புற விழுந்தாலும் மீசையில் மண் ஒட்டவில்லை என்கிறான்.
குப்பைமேடு உயர்ந்தது; கோபுரம் தாழ்ந்தது. 280

குயவனுக்குப் பல நாள் வேலை, தடிக்காரனுக்கு ஒருநாள் வேலை.
குரங்கின் கையில் கொள்ளி கொடுக்கலாமா?
குருடனுக்குக் குருடன் கோல்பிடிக்க முடியுமா?
குருடனைக் கோட்டம் பார்க்கச் சொன்னது போல.
குருட்டுக் கண்ணுக்குக் குறுணிமையிட்டு ஆவதென்ன? 285

குருவியின் தலையிலே பனங்காயை வைத்தாற் போல.
குலத்தைக்கெடுத்த தாம் கோடாலிக் காம்பு.
குலைக்கிற நாய்க்கு எலும்பைப் போட்டாற் போல.
குழந்தை பிறக்கு முன்னே பேர் இடுகிறதா?
குளம் காக்கிறவன் தண்ணீரைக் குடியானோ? 290

குளவிக் கூட்டைக் கோலால் கலைத்தாற் போல.
குளிக்கப்போய்ச் சேற்றைப் பூசிக்கொண்டது போல.
குறைக் குடம் கூத்தாடும்.
குறையச் சொல்லி நிறைய அள.
குறை வேலையைக் குருக்களுக்கும் காட்டாதே. 295

குற்றம் பார்க்கில் சுற்றம் இல்லை.
குற்ற முள்ள நெஞ்சு குறு குறுக்கும்.



## கூ

கூத்துக்கு ஏற்ற பந்தம் பிடிக்கிறது.
கூரையேறிக் கோழிபிடிக்காத குருக்களா வானம் ஏறி வைகுண்டம் காட்டுவார்!
கூழுக்கும் ஆசை மீசைக்கும் ஆசையா? 300

## கெ

கெடுவான் கேடு நினைப்பான்.
கெட்டகுடியே கெடும்; பட்ட காலிலே படும்.
கெட்டாலும் செட்டி செட்டியே; கிழிந்தாலும் பட்டு பட்டே.
கெட்டிக்காரன் புளுகு எட்டு நாளையில் தெரியும்.
கெட்டுப் போன பார்ப்பானுக்குச் செத்துப்போன பசு தானம். 305

கெண்டையைப் போட்டு வராலை இழுக்கிறது.
கெலிப்பும் தோற்பும் ஒருவர் பங்கல்ல.
கேடு வரும் பின்னே, மதி கெட்டுவரும் முன்னே.
கேட்டதை யெல்லாம் நம்பாதே; நம்பின தெல்லாம் சொல்லாதே.

## கை

கை அழுத்தமானவன் கரையேற மாட்டான். 310

கை ஊன்றிக் கரணம்போட வேண்டும்.
கை யானாக ஆறுதம் அருப் பிடிக்கும்.
கையிலும் மடியிலும் இல்லாதவனைக் கள்ளன் என்ன செய்வான்.
கையில் உண்டானால் காத்திருப்பார் ஆயிரம் பேர்.
கையில் வெண்ணெய் இருக்க நெய்க்கு அலைவானேன்! 315

கையில் புறாவை விட்டுக் காட்டுப் புறாவுக்குக் கண்ணி வைக்கிறதா?
கையிற் கிடைத்த அமுதைக் கமரிற் ஊற்றலாமா?

### கொ

கொக்கின் தலையில் வெண்ணெய்வைத்துப் பிடித்ததுபோல.
கொசுவுக் கஞ்சி குடி போகிறதா?
கொஞ்சிக் கூத்தாடி நடந்தாலும் குதிரை ஆகுமா கழுதை?
கொடிக்குச் சுரைக்காய் கனக்குமா?
கொட்டிக்கிழங்கும் ஒரு முட்டுக் குதவும்.
கொட்டினால் தேள், கொட்டாவிட்டால் பிள்ளைப்பூச்சி.
கொல்லத்தெருவில் ஊசி விலை போமா?
கொல்லுகிறதும் சோறு; பிழைப்பிக்கிறதும் சோறு. 325
கொள் என்றால் வாயைத் திறக்கிறது, கடிவாளம் என்றால் வாயை மூடுகிறது.

### கோ

கோடாலிக் காம்பு குலத்துக்கு ஈனம்.
கோடி வித்தையும் கூழுக்கு.
கோலிக் கோடி கொடுப்பதிலும் கோணாமல் காணி கொடுப்பது நலம்.
கோயில் பூனை தேவருக்கு அஞ்சுமா? 330
கோரைக் கிழங்கும் ஒருவேளைக் குதவும்.
கோலாடக் குரங்கு ஆடும்.
கோழி கறுப்பானால் அதன் முட்டையும் கறுப்பா?
கோழி மிதித்துக் குஞ்சு முடமாகுமா?

### ச

சட்டியில் இருப்பதுதான் அகப்பையில் வரும். 335
சண்டிக் குதிரைக்கு நொண்டிச் சாரதி.
சந்தனக்கட்டை தேய்ந்தாலும் கந்தம் குறை படுமா?
சந்திரனைப் பார்த்து நாய் குலைத் தாவதென்ன?
சந்திரன் சண்டாளன் வீட்டிலும் பிரகாசிக்கிறான்.
சமண சந்நியாசி கையில் சீலைப்பேன் அகப்பட்டது போல.
சமைக்கப் படைக்கத் தெரியாமல் போனாலும் உடைக்கக் கவிழ்க்கத் தெரியும்.



சம்பத்தும் விபத்தும் கூடவே இருக்கிறது.
சயமுள்ள மட்டும் பயமில்லை.
சர்க்கரை என்றால் தித்திக்குமா.
சன்னம் சன்னம் பார்க்கும். 345

### சா

சாட்சிக்காரன் காலில் விழுவதிலும் சண்டைக்காரன் காலில் விழலாம்.
சாட்டையடியும் சவுக்கடியும் பொறுக்கலாம், மூட்டுப்பூச்சி கடியும் முணு முணுப்பும் ஆகாது.
சாண் ஏற முழம் சறுக்குகிறது.
சாமி காட்டும், ஊட்டுமா.
சாராயத்தை வார்த்துப் பூராயத்தைக் கேள். 350

### சி

சிட்டுக்குருவி மேல் பனங்காயை வைத்தது போல.
சிதம்பரத்திலே பிறந்த பிள்ளைக்கு திருவெம்பாவை கற்றுக்கொடுக்க வேண்டுமா?
சித்திரமும் கைப்பழக்கம் செந்தமிழும் நாப்பழக்கம்.
சித்திரையென்று சிறுக்கிறது மில்லை, பங்குனியென்று பருக்கிறது மில்லை.
சிந்தின வீட்டிலே சேராது. 355
சிரித்துச் சிரித்துக் கழுத்தை அறுக்கிறது.
சிறுகக் கட்டிப் பெருக வாழு.
சிறு துரும்பும் பல்லுக்குத்த உதவும்.
சின்னப் பாம்பானாலும் பெரிய தடி கொண்டடி.

### சீ

சீச்சீ என்கிறதும் இந்த வாய்தான், சிவ சிவா என்கிறதும் இந்த வாய்தான். 360
சீரங்கத்திலே பிறந்த பிள்ளைக்குத் திருவாய் மொழி கற்பிக்க வேண்டுமா?
சீனி என்றெழுதி நக்கினால் இனிக்குமா?

சு

சுடர் விளக்கானாலும் தூண்டுகோல் ஒன்று வேண்டும்.
சுண்டைக்காயில் இரண்டு கடியா?
சுட்டவனிருக்கக் குண்டை நோகிறதா? 365

சுமப்பவன் அறிவான் காவடிப் பாரம்.
சும்மா கிடைக்குமா சோறுசலசல் பாதம்.
சுவர்க்கத்திலே தோட்டியும் சரி தொண்டமானும் சரி.

சூ

சூடு கண்டபூனை அடுப்பங்கரையில் போகாது.
சூடு மிதிக்கிற மாட்டின் வாயைக் கட்டலாமா? 370

சூதும் வாதும் வேதனை செய்யும்.

செ

செட்டி பணத்தைக் குறைத்தான் சேணியன் காலைக் குறைத்தான்.
செத்த பாம்பை ஆட்டுகிறான்.
செத்தவன் கண் செந்தாமரைக்கண், இருந்தவன் கண் பொட்டைக்கண்.
செத்தால் தெரியும் செட்டியார் வாழ்வு. 375

செருப்பின் அருமை வெயிலில் தெரியும்.
செவிடன் காதிலே சங்கூதினது போல.

சே

சேணியனைக் கெடுக்கச் சாண்குருக்கு போதாதா.
சேற்றில் கல்லெறிந்தால் காற்றிசையும் தெறிக்கும்.
சேற்றில் புதைந்த யானையைக் காகமும் கொத்தும். 380

சொ

சொல் அம்போ வில் அம்போ?
சொல்லாது பிறவாது அள்ளாது குறையாது.



சொல்லிக்கொடுத்த சொல்லும் கட்டிக்கொடுத்த சோறும் எதுவரை நிற்கும்?
சொல்லுகிறது ஒன்று செய்கிறது ஒன்று. 385

சொற்பனம் கண்ட அரிசி சோற்றுக் காகுமா?
சொற்பேச்சுங் கேளான்; சுய புத்தியு மில்லை.
சொன்னதைச் சொல்லும் கிளிப்பிள்ளை.

சோ

சோட்டாலடித்து வெகுமானம் கொடுப்பது.
சோறு அகப்பட்ட இடம் சுவர்க்கம். 390

சோற்றில் இருக்கிற கல் எடுக்காதவன் சேற்றில் விழுந்த எருமையை எடுப்பானு?
சோற்றுக்கும் கறுப்புண்டு சொல்லுக்கும் பழுதுண்டு.
சோற்றைக் கொடுத்துக் கழுத்தை அறுக்கிறதா?

த

தகப்பன் தேடக் கர்த்தன்; பிள்ளை அழிக்கக் கர்த்தன்.
தங்கச் சுருக்கத்தி யென்று கழுத்தை அறுத்துக் கொள்ளுகிறதா? 395

தடியெடுத்தவ னெல்லாம் வேட்டைக் காரனு?
தட்டிப்பேச ஆளில்லாவிட்டால் தம்பி சண்டப் பிரசண்டன்.
தண்ணீரில் இறந்தவரிலும் சாராயத்தில் இறந்தவர் அதிகம்.
தண்ணீரும் மூன்று பிழை பொறுக்கும்.
தந்தைசொல் மிக்க மந்திரமில்லை. 400

தம்பி உழுவான்; மேழி எட்டாது.
தருமம் தலை காக்கும்.
தலைநோவுக்குத் தலையணையைத் திருப்பிப் போட்டால் தீருமா?

தலைமேல் தண்ணீரானால் சாண் ஓடியென்ன முழம் ஓடியென்ன?
தலையிருக்க வாலாடுமோ? 405

தலையில் எழுத்திருக்கத் தந்திரத்தால் வெல்ல லாமா?
தலைவலியும் பசியும் தனக்கு வந்தால் தெரியும்.
தவிட்டுக்கு வந்த கைதான் தனத்துக்கும் வரும்.
தனக்குப் பின் தானம்.
தனிமரம் தோப் பாகுமா? 410

தன் ஊருக்கு ஆனை அயலூருக்குப் பூனை.
தன்குற்றம் தனக்குத் தெரியாது.
தன் நோய்க்குத் தானே மருந்து.
தன்பலம் கொண்டு அம்பலம் ஏறவேண்டும்.
தன்வீட்டு விளக்கென்று முத்தமிடலாமா. 415

தன்னைக் கொல்லவந்த பசுவைக் கொல்லு.

தா

தாயைப்பார்த்துப் பெண்ணைக் கொள்ளு; தயிரைப்பார்த்துப் பசுவைக் கொள்ளு.
தாய்கையில் இருக்கிற தனத்தைப் பார்க்கிலும் தன்கையில் இருக்கிற தவிடே மேல்.
தாரமும் குருவும் தலை விதி.
தாழ்ந்து நின்றால் வாழ்ந்து நிற்பாய். 420

தானும் உண்ணான் பிறருக்கும் கொடான்,
தானே பழுப்பது பழமா தல்லிப் பழுப்பது பழமா?
தான் ஆடாவிட்டாலும் தன் சதை ஆடும்.
தான் கள்வன் பிறரை நம்பான்.
தான் குடிக்காத பாலைக் கவிழ்த்து விடுகிறதா? 425

தான்சாக மருந்துண்பார் உண்டா?
தான் தேடாப் பொன்னுக்கு மாற்றுமில்லை உரையுமில்லை.
தான்பிடித்த முயலுக்கு மூன்றே கால்.



தி

திருடப்போனாலும் தெசை வேண்டும்.
திருடனை ராச விழி விழிக்கச் சொன்னால் விழிப்பானா? 430

திருடக்கொடுத்தது மல்லாமல் வைத்தியக்காரப்பட்டம்.
திருட்டுப்பயலுக்குப் புரட்டுக் குருக்கள்.
தினவு எடுத்தவன் சொறிந்து கொள்ளவேண்டும்.
தினைவிதைத்தவன் தினை அறுப்பான், வினைவிதைத்தவன் வினை அறுப்பான்.

தீ

தீயில்லாமல் புகை எழும்பாது. 435

தீட்டின மரத்தில் கூர்மை பார்க்கிறதா?
தீப்புண் ஆறும்; வாய்ப்புண் ஆறாது.
தீராக் கோபம் போராய் முடியும்.
தீவெட்டிக் காரனுக்குக் கண் தெரியாது.

து

துடைப்பக் கட்டைக்குப் பட்டுக் குஞ்சம் கட்டினாற் போல. 440

துஷ்டரைக் கண்டால் தூர ஒதுங்கு.
துணிந்தாருக்குத் துக்கம் உண்டா?
துணிந்தாருக்குச் சமுத்திரம் முழங்கால் ஆழம்.
துரும்பு நுழைய இடமிருந்தால் யானையை நுழைப்பான்.
துலக்காத ஆயுதம் துருப்பிடிக்கும். 445

துள்ளுகிற மாடு பொதி சுமக்கும்.
துன்பம் முந்தி, இன்பம் பிந்தி.

தூ

தூங்கினவன் கன்று சேங்கன்று.
தூங்குகிற புலியைத்தட்டி எழுப்புவானேன்?
தூரத்துப் பச்சை கண்ணுக்குக் குளிர்ச்சி. 450

தூரத்துப் பார்வைக்கு மலை மழமழப்பு, கிட்டப்போனால் கல்லும் கரடும்.
தூர்ந்த கிணற்றைத் தூர் வாங்காதே.

## தெ

தெய்வம் காட்டும்; ஊட்டுமா.

## தே

தேளுக்கு மணியம் கொடுத்தால் நிமிஷத்துக்கு நிமிஷம் கொட்டும்.
தேனுண்டானால் ஈ தேடி வரும். 455

## தொ

தொட்டிலும் ஆட்டிப் பிள்ளையும் கிள்ளுகிறதா?
தொட்டிற் பழக்கம் சுடுகாடுமட்டும்.
தொட்டுப் பார்த்தால் தோட்டியும் உறவு.

## தோ

தோட்டத்தில் பழமிருக்கத் தூரம் போவானேன்?
தோட்டுப் பாய் முடைகிறவனுக்குத் தூங்கப் பாயில்லை. 460
தோட்டிபோல உழைத்தால் துரைபோல சாப்பிடலாம்.
தோண்டக் குறுணி; தூர்க்க முக்குறுணி.

## ந

நகத்தால் கிள்ளாததைக் கோடாலிகொண்டு வெட்ட நேரிடும்.
நகமும் சதையும் போல.
நக்குகிற நாய்க்குச் செக்கென்றும் சிவலிங்கமென்றும் தெரியுமா? 465
நஞ்சு நாலுழி வேண்டுமா?
நண்டு கொழுத்தால் வளையி லிராது.
நண்டைச்சுட்டு நரியைக் காவல் வைத்தது போல.



நத்தையின் வயிற்றிலும் முத்துப் பிறக்கும். 470
நம்பவைத்துக் கழுத்தறுக்க லாமா?
நம்பினபேரை நட்டாற்றில் விடலாமா?
நம்பியான் விட்டதே தீர்த்தம்.
நயத்திலாகிறது பயத்திலாகாது.
நரிக்கு நாட்டாண்மை கொடுத்தால் கிடைக்கு இரண்டு ஆடு கேட்கும்.
நரிக்குக் கொண்டாட்டம் நண்டுக்குத் திண்டாட்டம். 475
நரியின் கையிலே குடல் கழுவக் கொடுத்தாற் போல.
நல்ல கதை நீளமில்லை.
நல்ல மாட்டுக்கு ஒரு சூடு.
நல்லபெண்ணுக்கு ஒரு சொல்.
நல்ல மரத்தில் புல்லுருவி பாய்ந்தது போல. 480
நல்லாரை நாவில் உரை, பொன்னைக் கல்லில் உரை

## நா

நா அசைய நாடு அசையும்.
நாம் ஒன்று நினைக்கத் தெய்வம் ஒன்று நினைத்தது.
நாயடிக்கக் குறுந்தடி வேண்டுமா? 485
நாயடித்த துட்டு குரைத்தா காண்பிக்கிறது.
நாயின் வாலைக் குணாக் கெடுக்கலாமா.
நாயைக் கொஞ்சினால் வாயை நக்கும்.
நாய் குரைத்ததற்கும் செருப்பாலடித்ததற்கும் சரி.
நாய்க்கு வேலையுமில்லை, நிற்க நேரமும் இல்லை.
நாய்வேஷம் போட்டால் குரைக்கவேண்டும். 490
நாலாம் தலைமுறையைப் பார்த்தால் நாவிதனும் சிற்றப்பனாவான்.
நாலாறு கூடினால் பாலாறு.
நால்வர் வாக்குத் தேவர் வாக்கு.
நாவில் பிறக்கும் நன்மையும் தீமையும்.
நாளும் சம்மந்தி, நடுவே இலைபோடு. 495

### நி

நிதம்கண்ட கோழி நிறம் கெடும்.
நித்தியம் கிடைக்குமா அமாவாசைச் சோறு.
நிழல் அருமை வெயிலில் போனால் தெரியும்.
நின்று தின்றால் குன்றும் குறையும்.

### நீ

நீந்த மாட்டாதவனை ஆறுகொண்டு போகிறது. 500

நீரைச் சிந்தினையோ சீரைச் சிந்தினையோ.
நீறுபூத்த நெருப்புப் போல.

### நூ

நூற்றுக்கிருந்தாலும் கூற்றுக்கு இரை.
நூற்றைக் கெடுத்தது குறுணி.

### நெ

நெடும்பகலுக்கும் அஸ்தமன முண்டு. 505

நெருப்பில்லாமல் புகையுமா.
நெல்லுக் குத்துகிறவனுக்குக் கல்லுப் பரீட்சை தெரியுமா.

### நோ

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்.
நோயாளிக்குத் தெரியும் நோயின் வருத்தம்.

### ப

பகலில் பக்கம்பார்த்துப் பேசு இரவில் அதுவும் பேசாதே. 510

பசிக்குக் கறி வேண்டாம், தூக்கத்துக்குப் பாய்வேண்டாம்
பசித்தவன் தின்னாததுமில்லை, பகைத்தவன் சொல்லாததுமில்லை.
பசித்தவன் பழங்கணக்கைப் பார்த்தது போல.
பசு கறுப்பென்று பாலும் கறுப்பா?
பசுவைக்கொன்று செருப்புத் தானஞ்செய்தது போல. 515



பசுவை விற்றால் கன்றுக்கு வழக்கா?
படிக்கிறது திருவாசகம், இடிக்கிறது சிவன்கோயில்.
படைக்கலம் அணிந்தாலும் பன்றி பன்றிதான்.
பட்டகாலிலே படும் கெட்டகுடியே கெடும்.
பட்டவர்க்குண்டு பலன். 520

பட்டா உன்பேரில் சாகுபடி என்பேரில்.
பட்டிக்காட்டுக்குச் சிவப்புத் துப்பட்டியே பீதாம்பரம்.
பட்டுக்கோட்டைக்கு வழி கேட்டால் கொட்டைப்பாக்குப் பத்துப்பணம் என்கிறான்.
பணக்காரன் பின்னும் பத்துப்பேர், பைத்தியக்காரன் பின்னும் பத்துப்பேர்.
பணம் உண்டானால் படையையும் வெல்லுவான். 525

பணம் உண்டானால் மணம் உண்டு.
பணம் என்றால் பிணமும் வாய்திறக்கும்.
பதறாத காரியம் சிதறாது.
பந்திக்கு முந்தவேண்டும் படைக்குப் பிந்தவேண்டும்.
பலதுளி பெருவெள்ளம். 530

பலநாள் வெயில் பொறுத்தாலும் ஒருநாள் மழை பொறுக்கலாகாது.
பலநாள் திருடன் ஒருநாள் அகப்படுவான்.
பலமரம் கண்ட தச்சன் ஒருமரமும் வெட்டான்.
பழகப் பழகப் பாலும் புளிக்கும்.
பழியோரிடம் பாவமோரிடம். 535

பழுத்த ஓலையைப் பார்த்துக் குருத்தோலை சிரிக்கிறதாம்.
பள்ளிக் கணக்கு புள்ளிக்குதவாது.
பனங்காட்டு நரி சலசலப்புக்கு அஞ்சுமா?
பனிப்பெருக்கிலே கப்பல் ஓடுமா?
பனையிலிருந்து விழுந்தவனைப் பாம்பு கடித்தது போல. 510

பன்றி பலகுட்டி, சிங்கம் ஒருகுட்டி.

### பா

பாடில்லாமல் பயனில்லை.
பாம்பறியும் பாம்பின் கால்.
பாம்புக்கு ராஜா மூங்கில் தடி.
பாம்புக்குப் பாலூட்டி வளர்த்தாற் போல. 545

பாம்பை முட்டையிலே புலியைக் குட்டியிலே கொல்ல வேண்டும்.
பார்த்தால் பூனை, பாய்ந்தால் புலி.
பாலுக்கும் காவல், பூனைக்கும் தோழன்.
பாலைப்பார்க்கிறதா பானையைப்பார்க்கிறதா?
பால்குடித்தவனுக்குப் பால் ஏப்பம். 550

பாவி கொடுமை பாலும் புளிக்கிறது.
பானையில் உண்டானால் அகப்பையில் வரும்.

### பி

பிச்சைச் சோற்றுக்குப் பேச்சில்லை.
பிச்சையிட்டுக் கெட்டவனுமில்லை, பிள்ளைப் பெற்றுக் கெட்டவளுமில்லை.
பிஞ்சிலே பழுத்தாற்போல. 555

பிள்ளைக்கு நாத்தியாரும் பெண்ணுக்கு மாமியாரும்.
பிள்ளை பிறக்குமுன்னே பேரிடுகிறதா?
பிள்ளையும் கிள்ளி தொட்டிலும் ஆட்டுகிறதா?

### பு

புண்ணிலே கோலிட்டதுபோல.
புதிய வண்ணான் பொந்துகட்டி வெளுப்பான். 560

புத்திகெட்ட ராஜாவுக்கு மதிகெட்ட மந்திரி.
புத்திமான் பலவான்.
புலி அடிக்குமுன்னே கிலி அடிக்கும்.
புலிக்குப் பிறந்தது பூனையாகுமா?



### பூ

பூவிற்ற காசு மணக்குமா புலால்விற்றகாசு நாறுமா? 565
பூனைக்குக் கொண்டாட்டம் எலிக்குத்திண்டாட்டம்.

### பெ

பெண்ணுக்குப் பொன் இட்டுப் பார் சுவருக்கு மண் இட்டுப்பார்.

பெருங்காயம் இருந்த குடுக்கை வாசனைபோகுமா?

### பே

பேசினால் வாயாடி, பேசாதிருந்தால் ஊமைப்பயல்.
பேச்சுக்கற்ற நாய் வேட்டைபிடிக்காது. 570

### பை

பையத்தின்றால் பனையும் தின்னலாம்.

பையெடுத்தவனெல்லாம் வைத்தியனா.

### பொ

பொடிமீனெல்லாம் பெருமீனுக் கிரை.
பொய்சொல்லி வாழ்ந்தவனுமில்லை, மெய்சொல்லிக் கெட்டவனுமில்லை.
பொய்சொன்ன வாய்க்குப் போசனம் கிடையாது. 575
பொறுத்தவர் பூமி ஆள்வார்.

பொன் விளக்கானாலும் தூண்டுகோல் வேண்டும்.
பொன்னின் குடத்துக்குப் பொட்டு வேண்டுமா.

### போ

போதுமென்ற மனமே பொன்செய்யு மருந்து.
போரடிக்கிற மாட்டின் வாயைக் கட்டலாமா? 580

போன சனியனைத் தாம்பூலம் வைத்தழைத்ததுபோல.
போனதை நினைக்கிறவன் புத்திகெட்டவன்.

## ம

மடியிலே கனமிருந்தால் வழியிலே பயம்.
மணலைக் கயிறாகத் திரிக்கிறது, வானத்தை வில்லாக வளைக்கிறது.
மணல் சோற்றில் கல் ஆராய்ந்தாற் போல. 585

மரக்குதிரையை நம்பி ஆற்றில் இறங்கினது போல.
மண்டை இருக்கிறவரையில் சளியுண்டு.
மண்பூனையானாலும் எலிபிடித்தால் சரி.
மதயானை போனது பெருவழி.
மந்திரம் கால் மதி முக்கால். 590

மந்திரிக்கும் உண்டு மதிகேடு.
மரமேறி விழுந்தவனைக் கடாவேறி மிதித்ததுபோல.
மரம் நட்டவனுக்குத் தண்ணீர் வார்க்கக் கடன்.
மருண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய்.
மருந்தும் விருந்தும் மூன்று நாள். 595

மலையைக்கல்லி எலிபிடிப்பது போல.
மலையைத் தூக்கச் சிற்றுளி போதாதா?
மலர்ந்து துப்பினால் மார்பின்மேல் விழும்.
மனக்கவலை பலக்குறைவு.
மனம்கொண்டது மாளிகை. 600

மனமுண்டானால் இடமுண்டு.

## மா

மா ஏற மலை ஏறும்.
மாடு மேய்க்காமல் கெட்டது பயிர்பார்க்காமல் கெட்டது.
மாமியார் உடைத்தால் மண்ணோடு மருமகள் உடைத்தால் பொன்னோடு.
மாமி மெச்சின மருமகளுமில்லை, மருமகள்மெச்சின மாமியுமில்லை. 605



மாவுக்குமாசை பணிகாரத்துக்கு மாசையா.

## மி

மிதித்தாரைக் கடியாத பாம்புண்டா?
மின்னாமல் இடிவிழுமா?
மின்னுவதெல்லாம் பொன்னல்ல.

## மீ

மீசைக்குமாசை கூழுக்குமாசை. 610

மீன்குஞ்சுக்கு நீச்சுப்பழக்க வேணுமா?

## மு

முகத்துக்கு முகம் கண்ணாடி.
முக்காலம் காகம் முழுகிக் குளித்தாலும் கொக்காகுமா?
முடவன் கொம்புத்தேனுக்கு ஆசைப்பட்டாற்போல.
முட்டாளுக்கு முழங்காலிலே புத்தி. 615

முட்டிக்கால் கழுதை பட்டவர்த்தனப் பரியாகுமா?
முதலிலார்க்கு ஊதியமில்லை.
முதற்கோணல் முற்றுங்கோணல்.
முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்.
முழுப்பூசனிக்காயை சோற்றோடு மறைக்கலாமா? 620

முள்ளாலே முள்ளை யெடுக்க வேண்டும்.
முற்றும் நனைந்தவர்க்கு ஈரம் ஏது.
முன் ஏர் போனவழி பின் ஏர்.

## மூ

மூத்தோர் சொல் வார்த்தை அமிர்தம்.
மூர்க்கரை மூர்க்கர் முகப்பர். 625

## மெ

மெழிச் செல்வம் கோழைபடாது.

## வ

வஞ்சகம் வாழ்வைக் கெடுக்கும்.
வடலியை வெட்டிவளர், எருமையைக் கட்டிவளர்.
வட்டி ஆசை முதலுக்குக் கேடு.
வந்த கூத்துக்கு ஆடித்தானே தொலைக்கவேண்டும். 630

வரவு கொஞ்சம் வலிப்பு மெத்த.
வரவுக்குத்தக்க செலவு.
வருந்தினால் வாராதது இல்லை.
வருவது சொன்னேன், படுவது படு.
வலிமைக்கு வழக்கில்லை. 635

வலியவந்த சீதேவியைக் காலால் உதைத்துத் தள்ளலாமா?
வலியவன் போனது வழி.
வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்.
வல்லவன் பம்பரம் மணலிலும் ஆடும்.
வளையப்போனாலும் வழியே போ. 640

வற்றிய ஓலை கலகலக்கும்.

## வா

வாதம் ஊதி அறி, வேதம் ஓதி அறி.
வாதி முற்றினால் வைத்தியன்.
வாயுள்ளவன் பிழைப்பான்.
வாய்க்கொழுப்புச் சீலையில் வடிகிறது. 645

வாய்சர்க்கரை, கை கருணைக் கிழங்கு.
வாய் நல்லதானால் ஊர் நல்லது.
வார்த்தை காற்று.
வாழ்வும் தாழ்வும் சிறிதுகாலம்.

## வி

விடிந்தால் தெரியும் வெளிச்சம். 650



விதி பெரிதா மதி பெரிதா?
வித்தில்லாத சம்பிரதாயம் மேலுமில்லை கீழுமில்லை.
வியாதிக்கு மருந்துண்டு, விதிக்கு மருந்துண்டா?
விரலைத் தொட்டுக்கொண்டு உரலை விழுங்குகிறது.
விரையொன்று போட்டால் சுரையொன்று முளைக்குமா? 655

விலங்கைவிட்டுத் தொழுவில் மாட்டிக்கொண்டது போல.
விழுந்தது பாம்பு, கடித்தது மாங்கொட்டை.
விழுந்தான் சிரித்தான் வெட்கத்துக்கஞ்சி.
விளக்கிருக்க நெருப்புக் கலைவானேன்?
விளக்கைப் பிடித்துக்கொண்டு கிணற்றிலே விழுகிறதா. 660

விளையாட்டா யிருந்தது வினையாய் முடிந்தது.
விளையும் பயிர் முளையிலே தெரியும்.
விறகு கோணலானாலும் நெருப்புப் பற்றாதா?

## வீ

வீடுபோ என்கிறது, காடு வா என்கிறது.
வீட்டுக்கு வீடு மண் அடுப்புத் தான். 665

வீட்டுக்கு ஒருவாசல் பூட்டுக்கு ஒரு திறவுகோல்.
வீட்டை ஏன் இடித்தாய், மூட்டைப்பூச்சிக்கு அஞ்சி.
வீட்டைக் கட்டிப்பார், கலியாணம் செய்துபார்.

## வெ

வெட்டிக்கொண்டு வாவென்றால் குத்திக்கொண்டு வருவான்.
வெண்கலம் ஒலிக்கும், பொற்கலம் ஒலிக்காது. 670

வெண்ணெயை வைத்துக்கொண்டு நெய்க்கு அழலாமா.

வெல்லப்பானையில் எறும்பு மொய்த்தது போல.
வெள்ளம் வருமுன்னே அணைகோலிக் கொள்ளவேண்டும்.
வெள்ளாடு நனைகிறதென்று வெங்கைப்புலி அழுததாம்.
வெறுங்கை முழம் போடுமா? 675

## வே

வேகப்பொறுத்தது ஆறப்பொறுக்கக் கூடாதா.

வேகிற வீட்டில் பிடுங்கினது லாபம்.
வேண்டுமென்று நாற்றால் வெண்ணெய்க் கட்டி
போல் நாற்கலாம்.
வேப்பெண்ணெய் விற்றகாசு கசக்குமா?
வேலிக்குப் போட்டமுள் காலுக்கு வினையாயிற்று. 680
வேலிதானே பயிரை மேய்ந்தால் விளைவதெப்படி?

வேலைக் கள்ளிக்குப் பிள்ளைமேல் சாக்கு.

# தமிழ் நூல்கள்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| கபட சந்நியாசி | ... | ... | 0 | 14 | 0 |
| கோனரி அரசகுமாரன் | ... | ... | 0 | 8 | 0 |
| ரத்னாவளி ... | ... | ... | 0 | 14 | 0 |
| சாரங்கதரன் ... | ... | ... | 0 | 8 | 0 |
| மார்க்கண்டேயர் ... | ... | ... | 0 | 10 | 0 |
| ரஜபுத்திரவீரன் ... | ... | ... | 0 | 8 | 0 |
| பொன் விலங்குகள் | ... | ... | 0 | 10 | 0 |
| சபாபதி ... | ... | ... | 0 | 8 | 0 |
| புத்த அவதாரம் ... | ... | ... | 1 | 0 | 0 |
| சத்ருஜித் ... | ... | ... | 0 | 12 | 0 |
| வேதாள உலகம் ... | ... | ... | 0 | 8 | 0 |
| விரும்பிய விதமே | ... | ... | 1 | 0 | 0 |
| வணிபுரவாசிகள் | ... | ... | 0 | 12 | 0 |
| முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும் | | ... | 0 | 8 | 0 |
| ஹரிச்சந்திரன் ... | ... | ... | 1 | 0 | 0 |
| அமலாதித்தியன் | ... | ... | 1 | 0 | 0 |
| கீதமஞ்சரி ... | ... | ... | 0 | 8 | 0 |
| சிறுத்தொண்டர் | ... | ... | 0 | 8 | 0 |
| போல்ல பெண்மணியே | ... | ... | 0 | 8 | 0 |
| யயாதி ... | ... | ... | 0 | 8 | 0 |
| கள்வர் தலைவன் ... | ... | ... | 0 | 12 | 0 |
| இரண்டு நண்பர்கள் | ... | ... | 0 | 14 | 0 |
| பிரஹசனங்கள் ... | ... | ... | 0 | 8 | 0 |
| மனோஹரா ... | ... | ... | 0 | 12 | 0 |

| | | | |
|---|---|---|---|
| வள்ளி மணம் ... ... ... | 0 | 12 | 0 |
| ஆனந்தகிருஷ்ணன் ... ... | 0 | 12 | 0 |
| சந்திரகாந்தா ... ... ... | 0 | 12 | 0 |
| ராஜாம்பாள் ... ... ... | 0 | 12 | 0 |
| மோஹனசுந்தரம் ... ... | 0 | 12 | 0 |
| சம்பூர்ண இராமாயணம் (தமிழ்) I & II ... | 1 | 0 | 0 |
| அத்யாத்ம ராமாயணம் தமிழ் வசனம் ... | 2 | 8 | 0 |
| சுவாமி விவேகானந்தர் அருள்மொழிகள் ... | 1 | 8 | 0 |
| மூன்று வரங்கள் ... ... | 0 | 6 | 0 |
| பத்மினி ... ... ... | 0 | 3 | 0 |
| பத்மநாபன் ... ... ... | 0 | 14 | 0 |
| வேதவல்லி ... ... ... | 0 | 5 | 0 |
| சுந்தரசிங் ... ... ... | 1 | 8 | 0 |
| வர்த்தக யுக்தி ... ... ... | 0 | 12 | 0 |
| புண்ணிய பூமி ... ... ... | 0 | 12 | 0 |
| கன்னியின் முத்தம் செட்டு 1க்கு ... | 5 | 0 | 0 |
| மனோஹரி ... ... ... | 0 | 8 | 0 |
| பரிமளா ... ... ... | 1 | 0 | 0 |
| மதனகல்யாணி செட்டு 1க்கு ... ... | 4 | 8 | 0 |
| அமிர்தகுமாரி or செஞ்சிப்புதையல் ... | 1 | 4 | 0 |
| மீனலோசனி ... ... ... | 0 | 6 | 0 |

**கே. எஸ். முத்தையா & கோ.,**

தபாற் பெட்டி 99, சென்னை.

PRINTED AT VEST & Co., 14, MOUNT ROAD, MADRAS.


# நார்மடி வேஷ்டி

இந்த "நார்மடிகளை" இனிப்படி மடிக்குப் பதிலாகவும் வைதிக கர்மங்களுக்கும் போதும் அணிந்து கொள்ளலாம். இது இனைப்படி நனைத்துக் கொள்வதினாலும் யாதொரு கெடுதியும் ஏற்படாது.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | ஜெஜம் | 34 | இஞ்சு | விலை | ரூ. 3 | முதல் | 3½ | வரை. |
| 2½ | ,, | 44 | ,, | ,, | ,, 5 | ,, | 6½ | ,, |
| 3 | ,, | 44 | ,, | ,, | ,, 6 | ,, | 8 | ,, |
| 3 | ,, | 50 | ,, | ,, | ,, 7 | ,, | 8½ | ,, |
| 3½ | ,, | 44 | ,, | ,, | ,, 7 | ,, | 9 | ,, |
| 3½ | ,, | 48 | ,, | ,, | ,, 8 | ,, | 10 | ,, |
| 4 | ,, | 44 | ,, | ,, | ,, 7 | ,, | 12 | ,, |
| 4½ | ,, | 50 | ,, | ,, | ,, 10 | ,, | 13 | ,, |
| 4 | ,, | 48 | ,, | ,, | ,, 9 | ,, | 12 | ,, |
| 5 | ,, | 50 | ,, | ,, | ,, 12 | ,, | 14 | ,, |

இந்த நார்மடி வேஷ்டிகளில் பெரிய ஜரிகைபோட்டதும் அனுப்பலாம். விலை அணா 8 முதல் ரூ. 1 வரை கூடும்.

## புதுச்சேரி பட்டுப் புடவைகள்

16 மு × 44 இஞ்சு புடவை விலை ரூ. 28
18 மு × 44 ,, ,, விலை ரூ. 30

விலாசம்:—

மானேஜர்,

"லக்ஷ்மி" ஆபீஸ்,

தபால் பெட்டி 99, மதராஸ்.

நமது நாட்டின் தற்கால வறுமையும்,
சிறுமையும் நீங்கிப் பெருமை அடையுமாறு,
நாடெங்கும் லக்ஷ்மியைப் பூஜை செய்யுங்கள். எங்கள்

# "லக்ஷ்மி"

என்ற மாதப் பத்திரிகையை எல்லோரும் ஆதரியுங்கள்.

எங்கள் "லக்ஷ்மி" சித்திரப்படங்களுடன் கூடிய பத்திரிகை.

சிறந்த தமிழ் அறிஞர்கள் 'லக்ஷ்மி'யில் வியாசங்கள் எழுதுகிறார்கள்.

எல்லோரும் விரும்பும் பல நல் விஷயங்கள் லக்ஷ்மியில் வெளி வருகின்றன.

உங்கள் வீட்டிற்கு நமது லக்ஷ்மியை வரவழையுங்கள்.

உங்கள் வீட்டில் எல்லோரும் லக்ஷ்மியை விரும்புவார்கள்.

லக்ஷ்மி உங்களைத் தேடி வருகின்றாள்.
அவளை அன்புடன் எதிர்கொண் டழையுங்கள்.

மாதிரிப் பிரதி இலவசம். மாதிரிப் பிரதியைப் பார்வையிட்ட பின் நீங்கள் சந்தாதாராவது நிச்சயம்.

உங்களுக்கு லக்ஷ்மி கடாக்ஷம் உண்டாவதாக!

| | | |
|---|---|---|
| வருட சந்தா உள்நாடு | ரூ. | 2 0 0 |
| வெளிநாட்டிற்கு | ,, | 2 8 0 |

விலாசம்:—

மானேஜர்,
"லக்ஷ்மி" ஆபீஸ்,
தபால் பெட்டி 99, மதராஸ்.


Vest & Co., Madras.

624 4/7/81
5-12-91

8/2/2003